**செய்தி வெளியீடு எண்:105** **நாள்: 23.02.2017**

**<u>கல்லூரி மாணவர்கள் தொழில்கள் துவங்க தொடக்க நிலை தொழிலூக்க பயிற்சி</u>**

தமிழக அரசின் தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை, கல்லூரிகள், தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் தொழில் பயிற்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் புதிய தொழில்கள் தொடங்க ஏதுவாக ஒரு திட்டத்தை துவக்கியுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் வாயிலாக புதிய தொழில்நுட்பத்துடனான தொழில்களை உருவாக்குவதற்காக ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் இது சார்ந்த பயிற்சி அளித்தல் புதிய தொழில் நிறுவனங்களை ஊக்குவித்தல், மற்றும் புதிய தொழில் நுட்பங்களுக்கு காப்புறுதி பெற்று (Patent Creation) அதன் மூலம் தொழில்களை ஊக்குவிப்பதே ஆகும்.

இந்த திட்டத்திற்காக **6** சிறந்த உயர்கல்வி நிறுவனங்கள் தொழில்முனைதல் மையங்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழில் முனைவு மையமும் (Hub) **20–40** கல்லூரிகளை இணைத்து வழிநடத்தும். இந்த கல்லூரிகளில் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கண்டறிதல், தொழில் திட்ட அறிக்கை தயாரித்தல் போன்றவற்றில் மாணவர்களுக்கு கல்லூரிகளிலே உதவிபெறும் வகையில் ஆசிரியர்களுக்கு ஊக்கப் பயிற்சி சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகிய **5** மையங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு **2016–17** நிதி நிலை அறிக்கையில் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தொழில் துவங்கும் வகையில் உதவிகள் அளிக்கும் திட்டத்தை அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக கோவை குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி, மற்றும் ஃபோர்ஜ் ஆக்ஸிலரேட்டர் ஆகியவை கல்லூரி மாணவர்களுக்கான தொடக்க நிலை தொழிலூக்கப் பயிற்சியை **4** கட்டங்களாக தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துகின்றன.

<u>(a) முதல் கட்டத்தில், கருத்தரங்கில் (Seminar)</u>: வழியாக செயலாக்க விழிப்புணர்வை தொழில் துவங்க விரும்பும் கல்லூரி மாணவர்களுக்கு, தொழில் பற்றிய செயல்முறை விளக்கங்கள் வழங்கப்படுகின்றது. இந்த கருத்தரங்கு மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பம் கண்டு பிடிப்பு மற்றும் தொழில் முனைவோர் திறமைகளைக் கூர்மைப்படுத்தி நிகழ் உலக பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்து அதற்கான பொருட்களை உருவாக்கவும், தொடக்க நிறுவனம் இயக்கவும் உதவி செய்வதே இதன் நோக்கமாகும். விருப்பமுள்ள மாணவர்கள் www.forgeforward.in/startup-activation-program/ என்ற இணைய தளத்தில் மூலம் **28.02.2017** வரை விண்ணப்பிக்கலாம். கருத்தரங்குகளின் பதிவு வீடியோவினை மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் பார்வையிடலாம்.

<u>(b) இரண்டாம் கட்டமாக</u>: பங்கேற்பாளர்கள் (தனி நபர் அல்லது அணிகள்) ஐடியா முகாம் மற்றும் தொடக்கப் பட்டறையில் கலந்து கொள்வதன் மூலம் தங்களது பிரச்சினை அறிக்கைகளை மதிப்பிடவும் தங்கள் வாடிக்கையாளரை கண்டறிவது, மாதிரி உருவாக்குவது, சந்தையில் தங்கள் தயாரிப்பு நடத்தல் மற்றும் வருவாய் உருவாக்குதல் போன்றவற்றை அறியலாம். போர்ஜ் நிறுவனம் மேற்படி ஐந்து பிராந்திய மையங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நாள் அமர்வுகள் நடத்த உள்ளது. இந்த பயிற்சியில் தங்களது யோசனைகளுடன் விண்ணப்பித்துள்ள அணிகள் மற்றும் தனிநபர்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு வல்லுனர்கள் உதவியுடன் தங்களது யோசனைகள் செம்மை செய்து கொள்ளலாம்.

மற்ற பங்கேற்போர் FORGE வலைதளத்தில் தெரிவிக்கும் சிக்கல் அறிக்கைகள் பட்டியலிருந்து ஏதேனும் ஒரு பிரச்சனையினை தேர்ந்தெடுத்து அதற்கான தங்களது யோசனையை தெரிவித்தும் இந்த பயிற்சியில் சேரலாம். இந்த ஐடியா கேம்ப்பின் முடிவில் ஒவ்வொரு பிராந்திய மையத்திலும் **25** ஐடியாக்கள்

தேர்வு செய்யப்பட்டு ஒரு நாள் தொழில் தொடக்க முகாமில் (Startup launcher) பங்கேற்க அனுமதிக்கப்படம். இந்த முகாமின் வாயிலாக அவர்களின் யோசனைகள் வணிக வடிவம் பெறும். அனுபவமிக்க தொழில் வழிகாட்டிகள் (Mentors) மற்றும் தொழில்நிறுவன வல்லுநர்கள் இந்த மாணவர்களை வழிநடத்தி முதலீடு விதைப் போட்டி (Pitch Competition) இல் பங்கெடுக்கச் செய்து ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் முதன்மையாக வரும் 5 அணிகள் அடுத்தக்கட்டத்திற்கு தேர்வு செய்யப்படும். இந்த முகாம்கள் பிப்ரவரி 22 முதல் மார்ச் 10 க்கு இடைப்பட்ட தேதியில் – கோவை FORGE நிறுவனத்தில் 22.02.2017 லும், சேலம் சோனா தொழில்நுட்ப கல்லுரியில் 28.02.2017லும் அதன் பின்னர் தஞ்சை சாஸ்த்ரா பல்கலைகழகம், மதுரை தியாகராஜ கல்லூரி மற்றும் சென்னை அண்ணா பல்கலைகழத்திலும் நடைபெற உள்ளது.

(c) மூன்றாவது கட்டத்தில்: இரண்டாம் கட்டத்தில் தேர்வு பெற்ற சுமார் 25 முதன்மை அணிகள் ஃபோர்ஜ் நடத்தும் தொழில் திட்ட வடிவமைப்பு (Bootcamp) ஒன்றில் கலந்துகொள்வார்கள். இந்தமுகாமில், வணிக நுணுக்கங்கள், சந்தை பகுப்பாய்வு மற்றும் நிதி நிர்வாகம் முதலிய தலைப்புகளில் ஆழ்ந்த அறிவுபெறும் பயிற்சிகள் வழங்கப்பெறும். இவர்களில் முதன்மையாக வரக்கூடிய 10 அணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாபெரும் முதலீடு செயல்விளக்க நிகழ்வு ஒன்றில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும். அதைதொடர்ந்து இந்த அணியினருக்கு ஒரு முளைநிலை பயிற்சிகள் (Pitch Training) வழங்கப்படும். இந்த செயல்விளக்க நிகழ்வு முகாமின் மூன்றாவது நாளில் நடத்தப்படும். 2017, மார்ச் 23முதல் 25 வரையில் இந்த நிகழ்வு கோவை KCT–FORGE நிறுவனத்தில் நடைபெறும்.

(d) இறுதியில் நான்காம் கட்டமாக: 10 அணிகளில் முதன்மையாக வந்த 3 அணிகளுக்கு ஃபோர்ஜ் திட்டத்தின் வாயிலாக ரூ. 5 இலட்சம் வரையில் தொழில் துவங்க விதைப்பணமாக (Seed money) வழங்கப்படும். இவற்றில் சிறந்த புதிய நுட்பத்துடனான தொழில் நிறுவனங்களுக்கு அரசு திட்டங்கள் மூலம் உதவிகள் பெற்று தரவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விபரங்களுக்கு டாக்டர். லட்சுமிமீரா, குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி (meera@kctbs.ac.in) மற்றும் திரு. விஸ்வநாதன் சகஸ்ர நாமம், இணை நிறுவனர் மற்றும் துணை தலைவர், ஃபோர்ஜ் ஆக்ஸிலரேட்டர், குமரகுரு தொழில்நுட்ப கல்லூரி, (vishwanath@forgeforward.in) அல்லது திரு.சிவசங்கர், உதவி இயக்குநர், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (pmo-iedp@editn.in) அல்லது விரிவான தகவல்களுக்கு http://www.forgeforward.in/startup-activation-program/ என்ற இணையதள முகவரியை தொடர்புகொள்ளலாம்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**